4. அறிவிப்பு

பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்தல்–கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். 7–5–2007 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), அவை உரிமைக் குழு (Committee of Privileges) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 2007 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

முற்பகல் 9–35

வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 2007 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2007 ஆம் ஆண்டு மே திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, மே திங்கள் 14 ஆம் நாள் திங்கட்கிழமை தேர்தல் நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2007 ஆம் ஆண்டு. . . (குறுக்கீடு)*

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர் மன்றத்தினுடைய. . .

[2007 மே 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இந்த issue நாளைக்கு எடுக்கவிருக்கிறோம், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்கு எடுக்கிறோம், உட்காருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: முக்கியமான பிரச்சினை. ரொம்ப நாளாக ஓடிக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப நாளாக ஓடிக்கொண்டிருக்கிறது என்பதால் நாளைக்கு எடுக்கவிருக்கிறோம். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நாளைக்கு எடுக்கிறோம் என்று சொல்கிறேன் இல்லையா? நீங்கள் உட்காருங்கள், நாளைக்கு எடுத்துவிடலாம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்து 15 நாட்கள் ஆயிற்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் ஏற்கெனவே discuss பண்ணியாயிற்று. உட்காருங்கள். நாளைக்கு எடுக்கிறோம், உட்காருங்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.